### வெள்ள நிவாரண நிதி: எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது!

### தி.மு.க. அரசு குறித்து விமர்சனம் செய்வதற்கு எடப்பாடி பழனிசாமிக்கு எந்த தகுதியும் கிடையாது!

# மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் 6 ஆயிரம் ரூபாய் நிவாரண உதவி வழங்கப்படும்!

## சென்னை - அண்ணா அறிவாலயத்தில் அமைச்சர் தங்கம் தென்னரசு பேட்டி!

சென்னை, டிச.13-

**சென்னை- அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த நிதி மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, "மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் 6 ஆயிரம் ரூபாய் நிவாரண நிதி வழங்கப்படும்" என்றும், "வெள்ள நிவாரண நிதியுதவி வழங்குவதில் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களை ஒன்றிய அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடத்துகிறது" என்றும் குறிப்பிட்டார்.**

**அமைச்சர் தங்கம் தென்னரசு நேற்று முன்தினம் (11.12.2023), மாலை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அதன் விவரம் பின்வருமாறு:-**

புயல் மற்றும் பெருமழைக்கு பிறகு சென்னை மாநகரம் தற்பொழுது மீண்டு எழுந்து வந்துள்ளது. முதல்வரின் நேரடி ஆய்வின் மூலமும், அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகவும் பேராபத்து தவிர்க்கப்பட்டுள்ளது. புயலுக்கு பின்னர் எடுத்த நடவடிக்கை காரணமாகவும் மக்களின் இயல்பு வாழ்க்கை திரும்பியுள்ளது. தண்ணீர் தேங்கிய பகுதிகளில் தண்ணீர் அகற்றப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு மக்கள் திரும்பியுள்ளனர். நான்கு மாவட்ட மக்களுக்காக முதல்வர் அறிவித்த நிவாரண தொகையின் காரணமாகவும் மக்களிடையே மகிழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இவற்றையெல்லாம் தாங்கி கொள்ள முடியாத சில எதிர்கட்சிகள் அரசின் மீது குற்றச்சாட்டுகளை சுமத்தி வருகின்றனர். தி.மு.க. அரசு 2021-ல் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் போது, தமிழ்நாடு கொரோனா பேரிடரில் சிக்கியிருந்தது. அந்த சமயத்தில் மிகச்சிறப்பாக அந்த காலத்தை தி.மு.க. கையாண்டது.

**கொரோனா பேரிடரை சிறப்பாக கையாண்ட கழக அரசு!**

அந்த காலத்தில் வடமாநிலங்களில்கூட கங்கையில் பிணங்கள் மிதந்தன, பல மருத்துவமனைகளில் ஆக்சிஜன் இல்லாமல் அவதிக்கு உள்ளாகினர். ஆனால் தமிழகத்தில் முதல்வரின் சிறப்பான நடவடிக்கையால் கொரோனா பேரிடர் நடவடிக்கையை தி.மு.க. அரசு சிறப்பாக நடத்திகாட்டியது. தனி குழு அமைத்து , உயிர் காக்கும் மருந்துகளை உடனடியாக மக்களுக்கு சென்றடைய வைத்தது என அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. மட்டும் அல்லாமல், பாதுகாப்பு கவச உடை அணிந்து கொரோனா வார்டுக்குள்ளே முதல்வரே சென்று, பாதிக்கப்பட்ட நபர்களுக்கு ஆறுதல் சொல்லும் முதல்வராகத்தான் தமிழ்நாட்டு முதல்வர் திகழ்ந்தார்.

ஒரு இயற்கைப் பேரிடர் ஏற்பட்டால் அதை எப்படி சிறப்பாக கையாள வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது தி.மு.க. அரசு. அந்த வகையில்தான் தற்போது ஏற்பட்ட பேரிடரையும் முன்னின்று எதிர்கொண்டது. முதல்வர் முன்னின்று, பேரிடரை எதிர்கொண்டார்.


தி.மு.க.விற்கு வாக்களிக்காதவர்கள், ஏன் தவறவிட்டோம் என்று தான் யோசிக்க வைக்கும் அரசாக இந்த அரசு விளங்கும் என முதல்வர் ஏற்கனவே கூறியிருந்தது போல, இந்த மழையின் போதும் எந்த அரசியலையும் பார்க்காமல் அனைத்து மக்களுக்காவும் ஒட்டுமொத்த தி.மு.க. அரசும் களம் இறங்கி இந்த பேரிடரை சமாளித்திருக்கிறது.

2015-ஆம் ஆண்டில் வந்த வெள்ளத்தின் போது, அப்போதைய அரசு எப்படி எதிர்கொண்டது என்பதையும், இந்த பெருமழையின் போது அரசின் முன்னெச்சரிக்கை காரணமாக தி.மு.க. அரசு எப்படி கையாண்டுள்ளது என்பதையும் "தி இந்து" ஆங்கில பத்திரிகை தெளிவாக கட்டுரை எழுதியுள்ளார்கள். வெள்ள தடுப்பு நடவடிக்கையாக, செம்பரம்பாக்கம் ஏரியில் தண்ணீர் வெளியேற்றத்தை முறையாக தமிழக அரசு கையாண்டது என்றும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது. நிவாரண உதவிகளில்கூட, அ.தி.மு.க. ஆட்சியில் இருந்தது போல் ஸ்டிக்கர் ஒட்டாமல், முறையாக யாருக்கெல்லாம் நிவாரணம் கிடைக்க வேண்டுமோ அனைவருக்கும் கொடுத்துள்ளோம்.

2015 பேரிடரை, தேசிய பேரிடராக அறிவிக்க வேண்டும் என அப்போதைய முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் மோடிக்கு கடிதம் எழுதினார். சென்னைக்கு உதவ அமெரிக்கா போன்ற நாடுகள்தான் வர வேண்டி இருந்தது. அப்போது நிவாரண உதவிகளின்போது எந்த ஒருங்கிணைப்பும் இல்லை என்று உயர்நீதிமன்றமே சுட்டிக்காட்டியது.

**அனைத்து கால்வாய்களும் தூர் வாரப்பட்டன!**

ஆனால் தற்போது மண்டல வாரியாக ஆட்சி பணியாளர்கள் நியமிக்கப்பட்டதுடன், கால்வாய்கள் அனைத்தும் முறையாக தூர்வாரப்பட்டு, முன்னதாகவே அரசு பொதுவிடுமுறையை அறிவித்தது.



2015-ஆம் ஆண்டின் போது, 10,250 கோடி ரூபாய் நிவாரண தொகையாக வேண்டும் என ஜெயலலிதா ஒன்றிய அரசிடம் கேட்டார். ஆனால் தற்போது 5,060 கோடி ரூபாய்தான் கேட்டுள்ளோம். ஆனால் அப்போதும் 5,000 ரூபாய்தான் நிவாரணமாக கொடுத்தார்கள். ஆனால் தி.மு.க. அரசோ 6,000 ரூபாய் கொடுக்கிறோம். இந்த நிவாரண தொகையையும் மத்திய அரசின் நிதியில்தான் கொடுப்பதாக கூறியிருக்கிறார் பா.ஜ.க.வின் மாநில தலைவர் அண்ணாமலை.

வெள்ளம் வந்தபோது, கமலாலயத்தின் கதவுகளை பூட்டிக்கொண்டு உள்ளே இருந்தவர்கள்தான் இவர்கள். எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமிகூட, முழங்கால் அளவு தண்ணீரில் இருந்து கொண்டு பேட்டி கொடுத்துவிட்டு, சேலம் சென்று இன்று மீண்டும் சென்னை வந்து நிவாரண தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என கூறுகிறார்.

முதலில் ஒன்றிய அரசிடம் பேசி, தமிழக அரசு கேட்கும் நிதியை அண்ணாமலை பெற்றுத்தர வேண்டும். ஜி.ஸ்.டி. நிலுவை தொகை உட்பட , பல மாநிலங்களை ஒப்பீட்டளவில் பார்த்தால், தொடர்ந்து தமிழகம் வஞ்சிக்கப்படுகிறது. நாம் 1 ரூபாய் கொடுத்தால் , நமக்கு திரும்ப வருவது வெறும் 29 பைசா தான். 2014-15 முதல் 2021-22 வரை நாம் ஒன்றிய அரசிற்கு கொடுத்தது 5.16 லட்சம் கோடி. நமக்கு திரும்ப கிடைத்திருப்பது 2.08 லட்சம் கோடி மட்டும் தான். இதை பா.ஜ.க. ஆளும் மாநிலங்களுடன் ஒப்பிட்டால் நிலைமை வேறு விதமாக இருக்கும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

**2015 இல் 289 பேர் உயிரிழந்தனர்!**

2015-ஆம் ஆண்டு மழை பாதிப்பின் போது அடித்து செல்லப்பட்டு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 289 பேர். 23 லட்சம் வீடுகள் பாதிக்கப்பட்டு, 10 நாட்களுக்கு பிறகுதான் மின்சாரம், தொலைத்தொடர்புகள் கொடுக்கப்பட்டன. ஆனால் இன்றைய சூழலில் அந்த நிலைமைகள் எதுவும் இல்லாத வகையில் தி.மு.க. அரசு செயல்பட்டது.

புயலின் மேகக்கூட்டங்கள் காரணமாக தொடர்ச்சியாக 44 மணி நேரம் இடைவிடா மழை என்பது பெய்தது. சென்னை மட்டும் அல்லாது, புறநகர் உட்பட அனைத்து பகுதிகளிலும் பெருமழை பெய்தது. தி.மு.க.அரசு செய்த மழைநீர் வடிகால் பணிகளின் காரணமாக புறநகரில் தாழ்வான பகுதிகளில் மட்டுமே நீர் தேங்கியது. 10 ஆயிரம் ரூபாய் நிவாரண தொகையாக கொடுக்க வேண்டும் என கூறும் எடப்பாடி பழனிசாமி, கொரோனா காலத்தின் போது வெறும் 1000 ரூபாய்தான் கொடுத்தார். ஆனால் தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் , கஜானா காலியாக இருந்த போதும் 4000 ரூபாய் நிவாரண நிதியாக கொடுத்தோம்.

2011 டிசம்பரில் தானே புயலின் போது அ.தி.மு.க.வினர் பொதுக்குழுவை கூட்டிக்கொண்டு இருந்தார்கள். எந்த முன்னறிவிப்பும் இல்லாமல் 2015-ஆம் ஆண்டில் சென்னையை மூழ்கடித்தார்கள். 2017-ஆம் ஆண்டின் போது ஓகி புயல் பாதிப்பின் போதுகூட சம்பந்தப்பட்ட அமைச்சர்களோ, அதிகாரிகளோ செல்லவில்லை. இப்படித்தான் அ.தி.மு.க. அரசு பேரிடரை கையாண்டது.

முதல்வர் அனைத்து இடங்களுக்கும் சென்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்ததுடன், புயலுக்கு பிறகும் பாதிப்பிற்கு உள்ளாகிய இடங்களுக்கும் முதல்வர் நேரடியாக சென்று பார்வையிட்டு நிவாரண பணிகளை முடுக்கிவிட்டார். வானிலை அறிக்கையை முன்னெச்சரிக்கையாக எடுத்து நட வடிக்கை எடுத்த காரணத்தால் பெரும் அளவிலான உயிரிழப்புகள் தவிர்க்கப்பட்டுள்ளது. இத்தனை பணிகளை செய்த பிறகும் அரசியல் உள்நோக்கத்திற்காக தான் எதிர்கட்சியினர் தி.மு.க. அரசின் மீது குற்றச்சாட்டு சுமத்துகின்றனர்.

கொசஸ்தலை ஆற்றில் உள்ள கழிவுகளை முழுமையாக அகற்றும் பணியில் அமைச்சர்களும், அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர். பல்வேறு துறைகளின் சார்பாக முதற்கட்டமாக பாதிப்பின் மதிப்பை கணக்கிட்ட 5,060 கோடி ரூபாய் கேட்டுள்ளோம். ஒற்றை இலக்கத்தில்தான் தற்போது உயிரிழப்பு ஏற்பட்டுள்ளது.

சென்னையை பொறுத்தவரை அனைத்து ரேஷன் அட்டைதாரர்களுக்கும் நிவாரண தொகை கொடுக்க 16ஆம் தேதி முதல் டோக்கன் விநியோகம் செய்யப்பட இருக்கிறது. காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டு ஆகிய மாவட்டங்களிலும், எந்த வட்டங்கள் எல்லாம் பாதிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும் எடுத்துள்ளோம். தற்போதைய நிலையில், ரேசன் அட்டைவைத்துள்ளவர்களுக்கு மட்டும் கொடுக்க இருக்கிறோம்.

**முன்னெச்சரிக்கையால் சேதாரங்கள் தவிர்ப்பு!**

அரசு அனைத்தையும் உணர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்த காரணத்தால்தான் பெரும் சேதாரங்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. இரண்டு நாள் தொடர் மழையாக இருந்தது. மழை நின்ற அடுத்த நிமிடமே நிவாரண பணிகள் முழுவீச்சில் செய்யப்பட்டன. மாநகராட்சி சார்பில் மழைநீர் வடிகால் தொடர்பாக இதுவரை என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, எவ்வளவு தொகை செலவிடப்பட்டுள்ளது என்ற அனைத்தையும் அமைச்சர் கே.என்.நேரு தெளிவாக கூறியுள்ளார். இந்த விவகாரத்தில் எதையும் மூடி மறைக்கும் எண்ணம் தி.மு.க. அரசுக்கு இல்லை.

மழையின் போது சிறு குறு தொழில்நிறுவனங்கள் அடைந்துள்ள பாதிப்புகள் குறித்தும் அவர்களுக்கான சலுகைகள் தொடர்பாகவும் முதல்வர் ஏற்கனவே ஒன்றிய அரசிற்கு கடிதம் எழுதியுள்ளார்கள். சம்பந்தப்பட்ட துறை அமைச்சரும் ஒன்றிய அமைச்சருடன் பேசி வருகிறார். மின்கட்டணம் செலுத்துவதில் கால அவகாசமும் அளிக்கப்பட்டுள்ளது.

நீர்வளத்துறை முறையாக அதன் பணிகளை செய்த காரணத்தால்தான் , கடந்த 2015 போல செம்பரம்பாக்கத்தில் மனித தவறினால் ஒரு பேரிடர் ஏற்பட்டதை போல, இந்த முறை ஏற்படாமல் தவிர்க்கப்பட்டது. முகத்துவாரத்தில் முறையான தூர்வாரும் பணிகளையும் நீர்வளத்துறை செய்துள்ளது.

நிவாரண தொகையை வங்கியில் போட்டால், மினிமம் பேலன்ஸ் போன்ற பல்வேறு பிரச்சினைகளின் காரணமாக தொகை பிடித்தம் செய்யப்பட்டது. அதனால் தற்போது வங்கியில் போடுவதை விட, கையில் சேருவதுதான் சரியாக இருக்கும்.

இதுபோன்ற பேரிடர்கள் வரும் போது அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் அரசு எடுக்கிறது. இந்த பேரிடர் சில பாடங்களை கற்றுத்தந்துள்ளது. அதன் அடிப்படையில் திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அமைச்சர் தங்கம் தென்னரசு குறிப்பிட்டார்.





விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் தெற்கு ஒன்றியம் அவலூர்பேட்டை எஸ்.பி. பிரபாகரன் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அவலூர்பேட்டை முன்னாள் நகர செயலாளர் எஸ்.பி.பிரபாகரனின் முதலாம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தி ஆயிரம் நபர்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிர மணியன், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், இளைஞர் அணி நிர்வாகி மணியரசன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

### அவலூர் பேட்டை நகர முன்னாள் செயலாளர்

# பிரபாகரனின் முதலாமாண்டு நினைவு நாள் நிகழ்ச்சி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் பங்கேற்பு!

செஞ்சி, டிச. 13 -

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம் முன்னாள் அவலூர் பேட்டை நகரச் செயலாளரும், முன்னாள் மாவட்ட குழு உறுப்பினருமான எஸ். பி. பிரபாகரனின் முதலாம் ஆண்டு நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார்.

மேல்மலையனூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சாந்தி சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார்.

தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகி மணியரசன் அனைவரையும் வரவேற்றார்.

அவலூர்பேட்டை எஸ்.பி .பிரபாகரன் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த எஸ்.பி. பிரபாகரனின் திருவுருவப் படத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் திறந்து வைத்து 1000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளையும், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியும் அவர் தொடங்கி வைத்தார்.

இதில் மேல்மலையனூர் மத்திய ஒன்றிய செயலாளர் நாராயணமூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராமசரவணன், நகரச் செயலாளர்கள் நடராஜன், அர்ஷத், செல்வம்,

மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் இராமசரவணன்,

மாவட்ட பிரதிநிதி முருகன், முன்னாள் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.பி.சம்பத், ஒன்றிய அவைத் தலைவர் உதயகுமார்,

ஒன்றிய துணைச் செயலாளர் ரகுராமன், அவலூர்பேட்டை முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர்கள் நடராஜன், ராஜவேலாயுதம்,

மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் குமார், மாவட்ட பொறியாளர் அணி துணை ஒருங்கிணைப்பாளர் டி.பி. ஏழுமலை, செஞ்சி தொகுதி தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மணிவண்ணன், மேல்மலையனூர் ஒன்றிய தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் பொன். வேணுகோபால், சதீஷ், கழக நிர்வாகிகள்,முரளி.பாஸ்கரன், கருணாகரன் ,சிவகுமார், தன்ராஜ், சுரேஷ் மதன் குமார் சர்தார் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## பாப்பிரெட்டிப்பட்டியில் சாலை அமைக்கும் பணி!

தருமபுரி, டிச. 13 -

தருமபுரி மேற்கு மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் பி.பள்ளிப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட ஜீ சஸ் நகர், வாசிகவுண்டனூர் ஆகிய பகுதிகளில் தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் ஆலோசனைப்படி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டம் நிதியின் மூலம் ரூபாய் 35 லட்சம் மதிப்பீட்டிலான சிமெண்ட் சாலை, சிமெண்ட் கல்பதிக்கும் சாலை, கழிவுநீர்க்கால்வாய் ஆகிய பல்வேறு திட்டப் பணிகளுக்கு பி.பள்ளிப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் திருமலாதினேஷ் தலைமையில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். உடன் ஊராட்சி செயலாளர் குமார், விஜயன் மற்றும் ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### காவிரி - வைகை - குண்டாறு

# இணைப்புக்கு விரிவான திட்ட அறிக்கை தயார்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு அமைச்சர் பதில்!

புதுடெல்லி, டிச. 13 -

உள்நாட்டு ஆறுகள் மற்றும் மாநிலத்துக்குள்ளேயே பாயும் ஆறுகளை இணைக்க மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள் பற்றி மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு மத்திய ஜல் சக்தி துறை இணையமைச்சர் பிஷ்வேஸ்வர்டு அளித்த பதில் வருமாறு:-



ஆறுகளுக்கிடையே நீரைப்பரிமாறும் வகையில் 1980ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டத்தின்படி தேசிய நீர்வள அமைப்பு 16 தீபகற்ப ஆறுகள் மற்றும் 14 இமாலயப்பிரதேச ஆறுகளை ஒன்றுக்கொன்று இணைக்கும் சாத்தியக்கூறுகளை கண்டறிந்து அறிக்கை தயாரிக்க முடிவெடுத்தது.

இதில் மொத்தமுள்ள 30 இணைப்புகளுக்கும் முன் சாத்தியக்கூறு அறிக்கைகளும், 24 இணைப்புகளுக்கு சாத்தியக் கூறு அறிக்கைகளும், 11 இணைப்புகளுக்கு விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

பேச்சுவார்த்தைகள் மற்றும் விரிவான கலந்தாலோசனைகள் மூலம் ஆறுகளை இணைப்பதற்கு மத்திய அரசு உச்சபட்ச முன்னுரிமையை அளித்து வருகிறது. இதற்காக 2014ல் ஒரு சிறப்புக்குழுவும், 2015 ஒரு செயல் திட்டக்குழுவும் தனித்தனியே அமைக்கப்பட்டு, இதுவரை சுமார் 20 கூட்டங்களை அவை நடத்தியுள்ளன.

திட்டமிட்டபடி இந்த முப்பது திட்டங்களும் அமலாகி சம்பந்தப்பட்ட ஆறுகள் இணைக்கப்பட்டால் இரண்டரை கோடி ஹெக்டேர் நிலத்தில் ஆற்றுப் பாசனம் மூலமாகவும், ஒரு கோடி ஹெக்டேர் நிலத்தில் நிலத்தடி நீர் உயர்வதன் மூலம் பாசனம் செய்வதன் மூலமும் விவசாயம் செய்ய முடியும். இது தவிர 34 மில்லியன் கிலோவாட் அளவுக்கு நீர்மின்சக்தியை உற்பத்தி செய்ய முடியும்.

அதுமட்டுமின்றி, இந்த ஆறுகள் இணைப்பின் மூலம் வெள்ளத் தடுப்பு, மீன் வளர்ச்சி, சுற்றுச் சூழல் மாசடையாமல் காப்பது, வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்துவது போன்ற நன்மைகளும் கிடைக்கும்.

இந்தத் திட்டங்களை முழுமையாக அமல்படுத்தினால் 166 பில்லியன் கன அடி நீரை தேவையான இடங்களுக்கு மடைமாற்ற முடியும். 2015-16ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பட்ஜெட்படி இந்தத் திட்டங்களை செயல்படுத்த 8.45 லட்சம் கோடி ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

திட்ட அறிக்கை தயாரான 16 திட்டங்கள் மூன்று தமிழ்நாட்டோடு தொடர்புடையவை. முதலாவது, பெண்ணாறு (சோமசீலா) - காவிரி (கிராண்ட் அனைக்கட்டு) இணைப்புத் திட்டம். இதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுவிட்டது.

இரண்டாவது, பம்பை- அச்சன்கோவில்-வைப்பாறு ஆறுகளை இணைக்கும் திட்டம். இதற்கான சாத்தியக் கூறு அறிக்கை தயாராகி இருக்கிறது.

மூன்றாவது தமிழ்நாட்டுக்குள் ஓடும் ஆறுகளான காவிரி (கட்டளை) வைகை - குண்டாறு இணைப்புத் திட்டம். இந்தத்திட்டத்திற்கும் விரிவான திட்ட அறிக்கை தயாராகிவிட்டது. அடுத்தகட்ட பணிகள் இனி மேல் தொடங்கப்பட வேண்டும்.

ஆறுகள் இணைப்புத்திட்டத்திற்காக சாத்தியக்கூறு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிப்பது உள்ளிட்ட முதற்கட்டப்பணிகளுக்காக கடந்த ஐந்தாண்டுகளில் சுமார் 350 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் பிஷ்வேஸ்வர்டு தெரிவித்தார்.



முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும்,சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டும்,கழக இளைஞர் அணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் மக்கள் பணியை பார்த்து மாநகர மாணவரணி விஸ்வநாதன் ஏற்பாட்டில் நெல்லை மாநகர அலுவலகத்தில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் மாற்றுக் கட்சிகளைச் சேர்ந்த 100 பேர்கள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.உடன் மாநகர துணைச் செயலாளர் அப்துல் கையும், பகுதி செயலாளர்கள் சுப்பிரமணியன், (குச்சை)அன்டன் செல்லதுரை (பாளை)நமச்சிவாயம் (நெல்லை)நாதன்,சுரேஷ்குமார், ஸ்டார் முருகன் உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் ந.குணசீலன்

### டிசம்பர் 13 (2015)



**இளமைக் காலம் தொட்டு கழகத்தில் தீவிரமாகப் பணியாற்றியவர்.**

**தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையுடன் இறுதிவரை வாழ்ந்தவர்.**

**1993ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட பொறுப்புக் குழு உறுப்பினராகவும், 1997ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2000ஆம் ஆண்டு முதல் பெரம்பலூர் மாவட்டக் கழகச் செயலாளராகவும், 2005ஆம் ஆண்டு முதல் திருச்சி மாவட்ட துணைச் செயலாளராகவும், 2010ஆம் ஆண்டு முதல் இறுதி வரை பொதுக்குழு உறுப்பினராகவும் கழகத்தில் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த பல்வேறு அறப் போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

